திரு. எஸ். ஜே. இராமசாமி: இந்தச் சிலைகளை எல்லாம் பாதுகாத்து மியூசியத்தில் வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அதை மியூசியத்தில் வைக்காமல் ஏன் அங்கேயே வைத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதை அரசுடைமையாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன,

வடக்கனந்தல் பேரூராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

*வினா எண். 88—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வடக்கனந்தல் பேரூராட்சியில் கோமுகி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்குவதற்கென மேல்நிலை தொட்டி ஒன்று கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் வாக்காளர் வயது.

வினா எண். 89—திரு. நா. பழனிவேல் } திரு. என். கிட்டப்பா : } மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வரும் நகராட்சி, ஊராட்சித் தேர்தல்களில் கேரளாவில் இருப்பதைப் போல் வாக்களிக்கும் வயது வரம்பை 21-லிருந்து 18 ஆகக் குறைக்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு, என். பழனிவேல்: வரும் நகராட்சித் தேர்தல்களிலும், ஊராட்சித் தேர்தல்களிலும் வாக்காளர்களின் வயது வரம்பை 21-ல் இருந்து 18 ஆக கேரளத்திலும் மேற்கு வங்கத்திலும் குறைத்திருப்பது போல் குறைக்க அரசு முன்வருமா? குறிப்பாக 18 வயதில் தாய்மார்கள் எல்லாம் இரண்டு மூன்று குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டாலும் அவர்கள் வாக்களிக்க உரிமை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, உடனடியாக வரும் நகராட்சி, ஊராட்சித் தேர்தலுக்கு இந்த வயது வரம்பை 21-ல் இருந்து 18 ஆகக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?